2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கால்நடை மருத்துவமனை

***71725—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, தாமரங்கோட்டை வடக்கு கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, தாமரங்கோட்டை வடக்கு கிராமத்தில் புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்புகள் தற்போது ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “புத்தன், ஏசு, காந்தி பிறந்தது பூமியில் எதற்காக?” என்ற அந்தப் பாடல் வரிகளை எண்ணுகின்றபோது, புத்தன், ஏசு, காந்தி, கலைஞர், தளபதி, சோனியா காந்தி பிறந்ததெல்லாம் ஏழைகளுக்காக என்று எண்ணத்தோன்றுகின்ற அளவிலே இன்றைக்கு ஆட்சியைத் நடத்திக் கொண்டிருக்கிற கலைஞருடைய ஆட்சியிலே—போளூர் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. போளூரிலே மாடர்ன் ரைஸ் மில்லைத் தவிர வேறு எந்தவிதமான தொழிலும் கிடையாது. தயவு செய்து அந்தப் பகுதியிலே

இருக்கின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்காக கல்வாசலில் ஒரு கால்நடை மருத்துவமனையை இந்த அரசு அமைத்துத் தருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மூன்றாயிரத்திற்கும் மேல் இருக்குமானால் அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையமும், பத்தாயிரத்திற்கும் மேல் இருக்குமானால் கால்நடை மருந்தகமும் அமைத்துத் தரப்படுகிறது. கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் ஒரு இடத்திற்கும் ஏற்கெனவே அப்பகுதியில் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையத்துக்குமிடையே 5 கி.மீ. தொலைவு இருத்தல் வேண்டும். மருந்தகம் அமைக்க வேண்டுமாயின் 6 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவமனை துவங்கப்பட வேண்டுமானால் தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40—க்கும் கூடுதலாக இருக்க வேண்டும். மேற்படித் தகுதிகள் இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்திலே, நிதிநிலையை அனுசரித்து முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

26—

வட்டாட்சியர் அலுவலகம்

***63294—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—